## பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பு - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேலியகொட மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்பு

(i) நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 919,407 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறையும் அதற்குச் சமமான அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) வட்டி வருமானத்தைக் கணக்குகளில் வைக்கும் போது அதற்குரிய ரூபா 693,251 தொகையான நிறுத்தி வைத்தல் வரி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிற்றுண்டிச்சாலைக்கு வழங்கப்பட்ட ரூபா 7,068,905 பெறுமதியான சமையலறை உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ரூபா 771,049 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கழிவுப் பொருள் தாங்கி ஆண்டின் போது பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்த போதிலும் அதனைக் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.2 தொங்கல் கணக்குகள்**

நிச்சயமற்ற வாடகை வருமானம் ரூபா 349,000 தொகை மற்றும் நிச்சயமற்ற வைப்பு மீதி ரூபா 6,550,000 தொகை என்பவற்றை நிதிக்கூற்றுக்களில் தனியாக வெளிப்படுத்துவதற்கும் சரியாக கணக்கு வைப்பதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பெறவேண்டிய வாடகை வருமானத்தில் ரூபா 7,510,500 தொகை அதாவது 16 சதவீதம் மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறவேண்டிய மீதியில் ரூபா 9,229,020 தொகை அதாவது 64 சதவீதம் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாகக் காணப்பட்டது.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 56,106,502 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 14,529,380 தொகைக்காக மீதி உறுதிப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) முகாமைத்துவ பொறுப்புப் பிரமாணம் | |
| (i) 8(அ) பந்தி | முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்புக் கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாயினும் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக 04 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |
| (ii) 10(ஆ), (இ) பந்திகள் | நிதிக்கூற்றுக்களின் பிரதிகள் திறைசேரிச் செயலாளர், நிதி அமைச்சர் மற்றும் கடற்தொழில், நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சருக்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 மற்றும் 757 | 2012 ஆம் ஆண்டிற்காக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு | "நம்பிக்கைப் பொறுப்பு" வருமானவரிக் கடப்பாட்டின் கீழ் ஒரு நபராக இருந்த போதிலும் அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகராண்மை சுற்றுநிருபம் - வழிகாட்டிக் கோவையின் 3.2 | கூறுவிலை கோரி கொள்வனவு செயற்பாடுகளை பின்பற்றாமல் சந்தைத் தொகுதியின் சுற்றாடலை சுத்தம் செய்யும் சேவைக்காக நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்துடன் 2012 பெப்ரவரி 14 ஆந் திகதி முதல் 5 வருடங்கள் வரையான நீண்ட கால எல்லைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. |
| (உ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதி பீஈ/423 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 04.1 ஆம் பந்தி | நம்பிக்கைப் பொறுப்பின் பாதீடு முன்னைய ஆண்டின் செப்தெம்பர் 15 இற்கு முன்னர் உரிய அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்று செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கடமைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்ட கடற்தொழில், நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் திட்டமிடல் உதவியாளருக்கு தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.5 உப பிரிவிற்கு முரணாக 2011 ஆம் ஆண்டில் 9.5 மாதங்களுக்காக ரூபா 212,500 தொகையான படி செலுத்தப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் மாதம் அப்பதவிக்குரிய உத்தியோகத்தரின் கடமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டதன் பின்னர் அந்த சாதாரண கடமைகளை நிறைவேற்றுவதற்காக

12.5 மாதங்களுக்காக ரூபா 287,500 தொகையும் அந்த உத்தியோகத்தருக்குப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நம்பிக்கைப் பொறுப்பின் நிதி விளைவுகள் ரூபா 863,735 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 34,941,614 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதியத்தின் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 34,077,879 அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருந்தது. வாடகை வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------------------

சந்தைத் தொகுதியை அமைப்பதற்குத் தேவையான சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் அரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 2,030,406,385 ஆக இருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பை உருவாக்கி சந்தைத் தொகுதியின் முழுமையான கட்டுப்பாடு மற்றும் முகாமைத்துவத்தைப் பொறுப்பெடுத்தல், அத்தொகுதியை செயற்திறனாக செயற்படுத்துதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் அதற்கு இணையான விடயமாக நடவடிக்கை எடுத்தலுமே அதன் இலக்கு மற்றும் செயற்பாடுகளாக இருந்தது. அதற்குரிய கணிசமான பொறுப்புக்கள் நம்பிக்கைப் பொறுப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பின் சகல வருமானங்களையும் உரிய பிரகாரம் அறவிடுவதற்கும் செலவினமாகக் கருதி முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அச்செயற்பாடுகளை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பினால் முடியாதிருந்தமை பின்வரும் விடயங்களின் படி அவதானிக்கப்பட்டது.

(அ) வாகனத் தளத்தின் வருமானம் செயற்பாடற்றிருந்தமை

(i) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் வாகனத் தளத்தின் வருமானத்தை சேகரிக்கும் நடவடிக்கைககள் நம்பிக்கைப் பொறுப்பினால் இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கூட்டுத்தாபனம் அந்த செயற்பாடுகளுக்காக மூன்றாம் தரப்பினரான கம்பனியுடன் நம்பிக்கைப் பொறுப்பின் அங்கீகாரமின்றி உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது.

(ii) உடன்படிக்கைகளுக்காக சட்டமா அதிபரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) கம்பனியினால் சேகரிக்கப்படுகின்ற வருமானத்தில் கழிக்கப்படக்கூடிய செலவினம் என்ன என்பது உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் நம்பிக்கைப் பொறுப்பிற்கு வருமானத்தை அனுப்பும் போது ஊழியர் சம்பளம் ரூபா 1,721,802 இனாலும் ஏனைய செலவினம் ரூபா 1,827,990 இனாலும் மேலதிகமாக செலவிடப்பட்டமையின் காரணமாக நம்பிக்கைப் பொறுப்பினால் இழக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 516,548 ஆகவும் ரூபா 548,397 ஆகவும் இருந்தது.

(iv) கம்பனியின் 2011/2012 மற்றும் 2012/2013 ஆம் ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்களின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக ரூபா 5,295,360 தொகை முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் வாகனத் தரிப்பிட வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்ததுடன் சந்தைத் தொகுதியில் பேணப்பட்டிருந்த ஏடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 39,636 தொகை குறைவாக நம்பிக்கைப் பொறுப்பில் சாட்டப்பட்டிருந்தது.

(v) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் வாகனத் தளத்தை நாளாந்தம் பயன்படுத்துகின்ற வியாபாரிகளுக்காக விநியோகிக்கப்பட்ட அங்கத்துவ அட்டைக் கட்டணம் மீளாய்வாண்டிற்காக குறைத்து அறவிடப்பட்டமையின் காரணமாக வருமானம் ரூபா 2,989,080 தொகை நம்பிக்கைப் பொறுப்பில் சாட்டப்பட்டிருந்தது.

(vi) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரியதாக கம்பனி அறவிட்டு இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட்ட வருமானத்தில் நம்பிக்கைப் பொறுப்பில் சாட்டப்படக்கூடிய ரூபா 14,529,376 தொகையை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திற்கு அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடைகளின் வாடகை வருமானம் முறையாக அறவிடப்படாமை

(i) 128 கடைகளையுடைய நிர்மாணிக்கப்பட்ட சில்லறை சந்தைத் தொகுதியின் 64 கடைகள் 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 9,625,540 செலவில் மொத்த விற்பனைக் கடைகளாக ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2014 ஆகஸ்ட் 31 வரையிலும் இந்த 64 கடைகளும் சில்லறைக் கடைகளாகக் காணப்பட்ட 64 கடைகளில் 35 கடைகள் பயன்படுத்தப்படாமையின் காரணமாக அவற்றின் வாடகை வருமானம் நம்பிக்கைப் பொறுப்பினால் இழக்கப்பட்டிருந்தது.

(ii) சில்லறைச் சந்தைத் தொகுதிக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட மாதாந்த மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 14,000 படியான 16 விற்பனைக் கூடாரங்களில் 02 கூடாரங்கள் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாவனைக்காகவும் ஒரு கூடாரம் சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் பாவனைக்காகவும் கட்டணம் அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்தன.

(இ) சந்தைத் தொகுதியின் சுற்றாடலில் அமைந்துள்ள சில கட்டிடங்களின் அத்திவாரங்களின் கொங்கிரீட் தட்டின் கீழ் நிலம் கீழிறங்கி நீர் நிறைந்திருந்ததுடன் சுற்றாடலிலுள்ள நிலம் மற்றும் வீதிகளில் இடையிடையே கீழிறங்கி கழிவு நீர் நிறைந்திருந்தது. அவற்றை நாளது வரையாக்குவதற்கு 2014 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர் அங்கீகாரமின்றி பெற்ற 50 நாள் விடுமுறைகளுக்காக சம்பளமற்ற விடுமுறையாகக் கருதி சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கழிவுப் பொருள் தாங்கியொன்றை நிர்மாணித்தல்

சந்தைத் தொகுதியில் இருந்து அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை உலர வைத்து தூளாக்கி விற்பனை செய்வதற்காக தனியார் நிறுவனத்தினால் அவர்களின் செலவில் இயந்திரகூடங்களை உள்ளடக்கிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிற்றுண்டிச்சாலையை வாடகைக்கு விடல்

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி இலக்கம் 3.2 இற்கு முரணாக சிற்றுண்டிச்சாலை 2011 ஏப்ரல் 01 ஆந் திகதி தொடக்கம் 10 வருட காலத்திற்காக ரூபா 129,000 தொகையான மாதாந்த வாடகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,143,868 பெறுமதியான 03 குளிரூட்டிகள் பாவனைக்கு எடுக்கப்படாமல் சிற்றுண்டிச் சாலையில் காணப்பட்டன.

(இ) மீன் வெட்டுவதற்கான கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டு வாடகைக்கு விடல்

(i) சந்தைத் தொகுதியில் 48 மீன் வெட்டும் கூடாரங்களை ரூபா 4,800,000 செலவில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 4,092,792 தொகை செலவிடப்பட்டு 44 கூடாரங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய கொடுப்பனவுகளைச் செய்யும் போது அளவிடைப் பத்திரங்கள் பரீட்சிக்கப்பட்டதற்கான சான்றுகளோ அல்லது பொறியியலாளரின் சிபார்சின் மூலப்பிரதியோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இந்த கூடாரங்கள் அரசாங்க கொள்வனவு நடைமுறைகளை பின்பற்றாமல் 44 நபர்களுக்கு 2012 மார்ச் மாதத்திலிருந்து வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாடகையாளருடன் முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பினால் வாடகை உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 வெளிப்படையான முறைகேடுகள்

(அ) பாதுகாப்பு சேவைகளுக்கான பிழையான கொடுப்பனவு – 2011, 2012 மற்றும் 2013

(i) சந்தைத் தொகுதிக்கு பாதுகாப்பு வழங்குகின்ற தனியார் பாதுகாப்புச் சேவை கம்பனி பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக ஒரு சேவை பாதுகாப்பிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 9 – 12 இடையிலான அளவில் ஈடுபடுத்தப்பட்டு 24 உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டமை குறிப்பிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பு கொடுப்பனவு செய்திருந்தது. அதன் பிரகாரம் 2011 யூன் 01 தொடக்கம் 2013

ஒக்தோபர் 31 வரையான காலப்பகுதியில் பிழையாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 15,399,050 ஆக இருந்ததுடன் அதற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியாக (வற்) ரூபா 1,884,954 தொகை மற்றும் தேசத்தைக் கட்யெழுப்பும் வரியாக (என்பீரீ) ரூபா 307,999 தொகையும் அந்தக் கம்பனிக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகளைச் செய்யும் போது உரிய கவனமில்லாமல் நடவடிக்கை எடுத்த நம்பிக்கைப் பொறுப்பின் உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை பாதுகாப்பு சேவைக் கம்பனியிலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2014 ஆகஸ்ட் 31 வரை அதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 மார்ச் 31 தொடக்கம் 2015 மார்ச் 30 வரை 4 வருட காலப்பகுதியை உள்ளடக்கும் வகையில் 2014 சனவரி 08 ஆந் திகதி இந்த பாதுகாப்பு சேவைக் கம்பனியுடன் நம்பிக்கைப் பொறுப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் சந்தைத் தொகுதியின் சுற்றாடலுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டிய இடங்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கைகள் தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பான நிபந்தனைகள் அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவும் இல்லை.

## 3.4 பதவியணியினர் நிருவாகம்

சந்தைத் தொகுதியின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்தொழில் கூட்டுத்தாபனத்திலிருந்து 41 பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் நம்பிக்கைப் பொறுப்பின் பதவியணியினர்களின் தேவை தீர்மானிக்கப்பட்டு பதவியணியினரை அங்கீகரித்துக் கொள்வதற்கும் ஒழுங்கமைப்பு அட்டவணையைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதி பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதகாலத்திற்குள் நிதியத்தின் நிதி அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 இன் நிதியாண்டிற்காக முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 15 மாத தாமதத்தின் பின்னர் 2014 மே 30 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 கூட்டிணைந்த திட்டம்

நம்பிக்கைப் பொறுப்பிற்காக மீளாய்வாண்டு மற்றும் எதிர்வரும் வருடங்களையும் உள்ளடக்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்பட வேண்டும்.

(அ) கொள்வனவு நடைமுறைகள்

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடும் கணக்கீடும்

(இ) வருமானம் சேகரித்தல்